கூட்டம் எண். 04/2023 - 2024

ஆரணி நகராட்சி

நாள். 29.12.2023

**சாதாரணக்கூட்டம் அறிவிப்பு**

05.01.2024 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரணி நகராட்சி அலுவலகம் பேரறிஞர் அண்ணா மன்றத்தில் நகர மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள சாதாரணக்கூட்டத்தில் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகரமன்ற தலைவர்

ஆரணி நகராட்சி

**திருக்குறள்**

அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

**குறள் எண்.** 10 - 92

**பொருள்கள்**

1. நகராட்சி ஆணையாளர் அவர்களின் டிசம்பர் – 2023 மாதக் குறிப்பு
   அலுவலக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.
2. நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர் – 2023 மாதக் குறிப்பு
   அலுவலக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.
3. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி வார்டு எண். 10, வரிவிதிப்பு எண். 038/10/901217, திரு. ஏ.எஸ். திருவேங்கிடம் என்பவர் பெயரில் தவறாக உள்ளது. மேற்படி இடத்தில் 038/10/901214க்கு வரிவிதிப்பு இல்லை. தவறாக தொடர்ந்து சொத்துவரி கேட்பில் வருகின்ற இவ்வரிவிதிப்பு எண்ணையும் அதற்குண்டான கேட்பு தொகை ரூ. 244378/-ஐ கணிணியில் இருந்து நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

   **அலுவலக குறிப்பு.** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
   2. அவசரம் அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

   **தீர்மான எண்**: 95 அனுமதி அளிக்கப்பட்டது.

(**கோப்பு எண்**. 976-1/அ1/2023)

4. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 30.09.2023 அன்று மாலை ஓய்வு பெற்ற திரு. எம். சதாசிவம் என்பவருக்கு கீழ்க்கண்டவாறு

| | | | |
|---|---|---|---|
| 1. | சிறப்பு சேமநல நிதி அசல் | - | ரூ. 2960/- |
| 2. | அசல்கான வட்டி தொகை | - | ரூ. 24090/- |
| 3. | நிர்வாக பங்குத் தொகை | - | ரூ. 10000/- |
| | **ஆகமொத்தம்** | | **ரூ. 37050/-** |

வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்**: 96 அனுமதி அளிக்கப்பட்டது.

**கோப்பு எண்**. 1968/பி2/2023.

5. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் டம்பர் பிளேசர் மற்றும் டிராக்டர் ஆகியவற்றிற்கு 20.11.2023 மற்றும் 30.11.2023 ஆகிய தேதிகளோடு இன்சூரன்ஸ் முடிவடைகிறது. அவை மேலும் ஒரு ஆண்டிற்கு புதுப்பிக்க யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு கீழ்க்கண்டவாறு தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | TN 97 8533 (டிராக்டர்) | - ரூ. 9978/- |
| 2. | TN 25 AX 6476 (டம்பர் பிளேசர்) | - ரூ. 32765/- |
| | **ஆகமொத்தம்** | **ரூ. 42743/-** |

**அலுவலக குறிப்பு**: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்**: 97 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**கோப்பு எண்**. 634/2016/எச்1

6. ஆரணி நகராட்சி பகுதியில் டெங்கு நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு கிருமிநாசினி தெளித்தல் மற்றும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 21.08.2023 முதல் 15.11.2023 வரையிலான காலத்திற்கு ஆரணி மல்லிகை சுய உதவிக்குழு 14.08.2023 அன்று உத்தரவு வழங்கப்பட்டது. பணிக்கான காலம் முடிவடையும் நிலையில் உள்ளது. பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்படி குழுவிற்கே மீண்டும் 16.11.2023 முதல் 28.02.2024 வரை பணி நீட்டிப்பு செய்து வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**. 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயித்த தினசரி கூலி அடிப்படையில் கூலி தொகை வழங்கவும். மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 3. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்பு எண்.** 538/2020/எச்1 **தீர்மான எண்**: 98 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

7. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான நகரமன்ற தலைவர் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு வாகன வண்டி எண். TN97C5499 சர்வீஸ் செய்யவும். அதில் ஏற்பட்டுள்ள பழுது நீக்கம் செய்ய ஜெயின் கார்ஸ் நிறுவனம் வேலூர் அனுப்பி சரி செய்ய ஆகும் தோராய செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஜெயின் கார்ஸ் வேலூர் நிறுவனத்திற்கு வாகனத்தை அனுப்பி பணியினை முடிக்கவும், மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 99 அனுமதி அளிக்கப்பட்டது.

8. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் பொறியியல் பிரிவு ஈப்பு வாகன வண்டி எண். TN 25 AX 9318 சர்வீஸ் செய்யவும், அதில் ஏற்பட்டுள்ள பழுது நீக்கம் செய்ய ஜெயின் கார்ஸ் நிறுவனம் வேலூர் அனுப்பி சரி செய்ய ஆகும் தோராய செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி, நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஜெயின் கார்ஸ், வேலூர் நிறுவனத்திற்கு வாகனத்தை அனுப்பி பணியினை முடிக்க நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**: 100 அனுமதி அளிக்கப்பட்டது.

9. ஆரணி நகராட்சியில் 2023 – 2024ம் ஆண்டிற்கு பொறியியல் பிரிவு, பொதுப்பிரிவு, பொது சுகாதாரப் பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் அரசின் திட்டப்பணிகள் விளம்பரம் தினசரி செய்தி தாள்களில் பிரசுரமாகும். விளம்பரக்கட்டணம் செலுத்தவும் தோராய செலவினம் ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி செலவினம் மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**கோப்பு எண்.** 767/இ1/2022 **தீர்மான எண்:** 101 அனுமதி அளிக்கப்பட்டது.

10. இந்நகராட்சியில் பொறியியல் பிரிவு, பொதுப்பிரிவு, வருவாய் பிரிவுகளில் இருக்கும் வழக்குகள் மற்றும் நீதிமன்ற வழக்கறிஞர்கள் கட்டணங்கள் செலுத்த 2023 – 2024ஆம் நிதியாண்டிற்கான தோராய செலவினம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.** 1615/2023/இ1. **தீர்மான எண்:** 102 அனுமதி அளிக்கப்பட்டது.

11. இந்நகராட்சியின் அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும் பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் அலுவலகத்தில் இல்லாத காரணத்தால் அவசர அவசியம் கருதி 12A Toner வகை 20No's மற்றும் 328 A tonner வகை 10 No's மற்றும் Mouse, Keyboard – 7 யை அரசு அங்கிகாரம் பெற்ற கூட்டுறவு சங்கம் திருவண்ணாமலை மாவட்ட எழுது பொருள் மற்றும் அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் மூலம் வாங்கிக்கொள்ள ஆகும் தோராயன செலவினம் ரூ. 58700 – க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** - மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**தீர்மான எண்:** 103 ஒப்புதல் அளிக்கப்பட்டது.

12. ஆரணி நகராட்சியில் எதிர் வரும் 18.12.2023 அன்று முதல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டுள்ள மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாக இந்நகராட்சிக்கு தேவையான புதியதாக இரண்டு எண்ணிக்கை பிரிண்டர்கள் மற்றும் ஸ்கேனர்கள் குறைந்த விலைப்புள்ளியில் பெற்று வாங்கி கொள்ள ஆகும் தோராய செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்,

2.மேலும், அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்குறிப்பிட்டுள்ள கணினி சம்மந்தமான பொருட்கள் குறைந்த விலைப்புள்ளியில் வாங்கியதை மன்றம் ஏற்கலாம்.

3.மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதியளிக்கலாம்.

**தீர்மான எண்**: 104 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

13. ஆரணி நகராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு முகாம்கள் நடைபெற உள்ளது. முகாம்கள் நடைபெறும் இடங்களில் தடையில்லா இணைய வழி சேவை (Leased Line 300 Mbps) இரண்டு இணைப்புகள் மற்றும் இரண்டு Wifi Router உடன் இரண்டு இணைப்புகள் பெற்று மேற்படி திட்டத்தினை செயல்படுத்த ஆகும் தோராய செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**முகாம்கள் நடைபெறும் தேதி மற்றும் இடங்கள் விவரம் பின்வருமாறு,**

| வ. எண் | முகாம் நடைபெறும் நாள் | முகாம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|
| 1. | 18.12.2023 | கே.பி.கே. திருமண மண்டபம், சைதாப்பேட்டை, ஆரணி |
| 2. | 19.12.2023 | பார்வதி நாகைய்யா திரமண மண்டபம், அருணகிரிசத்திரம், ஆரணி |
| 3. | 21.12.2023 | லலிதா மஹால், சுந்தரம் தெரு, கொசப்பாளையம், ஆரணி |
| 4. | 22.12.2023 | பாஞ்சாலியம்மன் திருமண மண்டபம், கொசப்பாளையம், ஆரணி. |
| 5. | .27.12.2023 | சந்திராம்மாள் ஆறுமுகம் திருமண மண்டபம், வாழப்பந்தல் ரோடு, ஆரணி. |
| 6. | 28.12.2023 | KAS திருமண மண்டபம் புதுகாமூர் ரோடு, ஆரணிப்பாளையம், ஆரணி. |
| 7. | 02.01.2024 | EN மஹால் மண்டபம், ஆரணிப்பாளையம், ஆரணி. |

**அலுவலக குறிப்பு**:- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிரந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதியளிக்கலாம்.

**தீர்மான எண்**: 105 அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

நகரமன்ற தலைவர்

ஆரணி நகராட்சி

நகராட்சி அலுவலகம்,

ஆரணி.

நாள். 29.12.2023.